# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்
K.உமாராணி, பி.இ.,
உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்:34, தமிழ் முத்து நகர்,
கோண்டூர், கடலூர் – 607 006 .
தொலைபேசி எண்:04142-290346
E-mail ID: ms.cudlpa@gmail.com

பெறுநர்
ஊராட்சி மன்றத்தலைவர்,
கீழ்கவரப்பட்டு கிராமம்
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

---

ந.க.எண்.586/2020/கமா

நாள்: 11.04.2022.

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – கடலூர் மாவட்டம் - பண்ருட்டி வட்டம் – அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், கீழ்கவரபட்டு கிராமம் - ச.எண்: 206/8A2, -ல், 0.41 ஏக்கர் அல்லது 17859.60ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப -ஒப்புதல் வழங்குதல் -குறித்து.

பார்வை:
1. மனுதாரர் திரு.L.தீனதயாளன், பண்ருட்டி அவர்களின் விண்ணப்பம், நாள். 05.10.2021
2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , கடலூர் மாவட்டம், அவர்களின் ந.க.எண். 586/2020 நாள்.27.10.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19799/2020/போ, நாள். 24.12.2020
4. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
5. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD(3)) துறை, நாள்.04.05.2017
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020
7. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.23.09.2020
8. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (UD(4)) , நாள். 09.12.2020
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 03.08.2017

10. நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 13686/2017/ LA1, நாள். 08.09.2017
11. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண்.4367/2019/TCP2, நாள்.05.02.2020.
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண்.4367/2019/TCP2, நாள்.14.08.2021
13. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் கிராம ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் எண்.ஆ4/2835/2020, நாள்.29.11.2021.
14. சார்பதிவாளர், பண்ருட்டி அவர்களின் கடிதம் எண்.35/2022, நாள்.24.01.2022
15. திரு. L.தீனதயாளன், பண்ருட்டி அவர்களின் கடிதம் நாள். 07.02.2022.

-------------------.

பார்வை 1-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2- ல் சுட்டிய இவ்வலுலக கடிதம், நாள். 27.10.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 13-ல், சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண். 3393/2021, மற்றும் 3394/2021நாள். 15.09.2021 ஓப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.உ.இ(கமா).04/2022** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ) ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணை கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:-

1. (a) பார்வை 8- ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 6- ல் கண்ட **TNCDBR**-2019 விதி எண்.47(11)- ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains/ Water supply facilities by constructing required OHT, Provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. **(EWS)** பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020-ன்படி EWS ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 10ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with

the Real Estate Regulatory Authority – ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 8- ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி மற்றும் விதி எண்.9-ன்படி சுவராய்வு கட்டணமும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 4 மற்றும் 8-ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலைவரி மற்றும் இதர கட்டணங்களை மனுதாரரால் செலுத்தப்பட்ட பின்னர் இசைவு வழங்கப்பட்டது. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி 20% கட்டணத்தில் தொகையை "Armed Forced Flag Day Fund" என்ற பெயரில் Payable at Cuddalore என தேசியமயமாக்கப்பட்டவங்கியின் வரைவோலை பெறப்பட்டுள்ளது.

11/4/2022

உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கடலூர் மாவட்டம்

11/4/2022 11/4/2022

**இணைப்பு:-**

வரைபடம் மற்றும் மனைப்பிரி நிபந்தனைகள்
(2 தொகுப்பு மட்டும்)

**நகல்:-**

1. திரு.L.தீனதயாளன்,
த/பெ. லஷ்மிநாராயணன்,
எண். 4வது குறுக்கு தெரு, பண்ருட்டி 607 106.
2. உதவி இயக்குநர்(நில அளவை), கடலூர் மாவட்டம்.
3. சார்பதிவாளர், பண்ருட்டி சார்பதிவாளர் அலுவலகம், கடலூர் மாவட்டம்.
4. **The Chairman,**
**Tamilnadu Real Estate Regulatory Authority, (TNRERA),**
**NO.1A, Ist Floor, Gandhi Irwin Bridge Road, Egmore,**
**Chennai -600 008.**

1. இருப்பு கோப்பு (வரைபடம் -1(ம) நிபந்தனைகள் படிவம்-1)
2. கோப்பு (வரைபடம் -1(ம) நிபந்தனைகள் படிவம்-1)

அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் கீழ்கவரப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை: திருமதி.V.ஜோதி.,

ந.க.எண்: 001/2022

நாள்:12.07.2022

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் – அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் – கீழ்கவரப்பட்டு ஊராட்சி கிராம சர்வே எண் 206/8A2ல் 0.41 ஏக்கர்(அ) 17859.60 ச.அடி பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

கீழ்கவரப்பட்டு ஊராட்சி
தேதி: 12/07/22
அண்ணாகிராமம் ஒன்றியம்

பார்வை : **1.**உதவி இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் எண்.34 தமிழ் முத்து நகர் கோண்டூர் கடலூர்.6 அவர்களின் ந.க.எண்.586/2022 க.மா நாள்: 11.04.2022

**2.**அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள் 04.06.2004

**3.**அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD(3)) நாள் 04.05.2017

**4.**அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD(3)) நாள் 09.12.2020

**5.**கீழ்கவரப்பட்டு ஊராட்சிமன்ற தீர்மாணம் எண் 1/28.07.2021

***********

ஆணை:

பார்வை 2,3,4 ல் காணும் அரசாணைகளின்படி கிராம ஊராட்சிகளில் உள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்தல் தொடர்பாக வழிக்காட்டி நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் கீழ்கவரப்பட்டு ஊராட்சி கிராம சர்வே எண் 206/8A2 ல் 0.41 ஏக்கர்(அ) 17859.60 ச.அடி பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொ) எண். 34 தமிழ்முத்து நகர் கோண்டூர் கடலூர். 6 அவர்களின் ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண். 04/2022 நாள்: 11.04.2022 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் (பொ) எண். 34 தமிழ்முத்து நகர் கோண்டூர் கடலூர்.6 அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் திரு. எல்.தீனதயாளன் த/பெ லக்ஷ்மி நாராயணன் எண். 4 ஆவது குறுக்கு தெரு பண்ருட்டி என்பவரால் கீழ்கவரப்பட்டு ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலை 409.94 ச.மீ, மூலை மற்றும் ஊராட்சிக்கான ஒதுக்கீடு 'A' 9.29.ச.மீ இடம் கீழ்கவரப்பட்டு ஊராட்சி

மன்ற தலைவர் பெயருக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் தானப்பத்திர ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் TANGEDCO (B) என குறிப்பிட்டுள்ள 8.63 ச.மீ இடம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிற்மான கழகத்திற்கு தான பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் திரு.எல்.தீனதயாளன் த/பெ லஷ்மி நாராயணன் எண். 4 ஆவது குறுக்கு தெரு பண்ருட்டி என்பவரால் மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ம் மற்றும் நிலப்பயன் மாற்ற கட்டணமாக சந்தை மதிப்பில் 3% ரூ.5000/-ம் உரிய கணக்கு தலைப்பில் மனை உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நன்னிலை வரி கட்டணத்தில் 20% தொகையை ARMED FORCES FLAG DAY FUND பெயருக்கு கொடி நாள் நிதியாக மனை உரிமையாளரால் வங்கி வரைவோலை செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் கீழ்கவரப்பட்டு ஊராட்சி கிராம சர்வே எண் 206/8A2 ல் 0.41 ஏக்கர்(அ) 17859.60 ச.அடி பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகாிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கட்டப்பட்டுள்ள எந்தவொரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம். மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019 ல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

5. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

6. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையின் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டதற்கான காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. மனையில் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

8. இம்மனைப்பிரிவில் நிலங்கள் தொடர்பான மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்க சான்றின் சரிதன்மையை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம், கடலூர் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்தும் மேலும் மனைப்பிரிவில் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பது கண்டறியப்படின் ஒட்டுமொத்த மனைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின்</u>
<u>ஒதுக்கீடு விபரம்</u>

| <u>ஒதுக்கீடு விபரம்</u> | | அளவுகள் | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 0.41 ஏக்கர் (1670.00 ச.மீ) | – |
| ஒதுக்கிய மனைகள் | – | 12 மனைகள் | – |
| <u>பொது ஒதுக்கீடு</u><br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது | – | – | – |
| 1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை | – | 409.94 ச.மீ | – |
| உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு (A) | | 9.29 ச. மீ | 0.74% |
| மின்சாரத் துறை ஒதுக்கீடு (B) | – | TANGEDCO 8.63 ச.மீ | 0.68 % |

ஊராட்சி மன்றத் தலைவர்
கீழ்கவரப்பட்டு ஊராட்சி
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்

தலைவர்
ஊராட்சி மன்றம்,

பெறுதல்

திரு.டதீனாதயாளன் த/பெ. லஷ்மிநாராயணன்
எண். 4வது குறுக்கு தெரு.
பண்ருட்டி வட்டம், 607 106
கடலூர் மாவட்டம்.

நகல் : ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம், கடலூர், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பபடுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பபடுகிறது.

நகல் : சார்பதிவாரர், சார்பதிவாளர் அலுவலகப், பண்ருட்டி.

நகல் : ஊராட்சிமன்றத்தலைவர், கீழ்கவரப்பட்டு ஊராட்சி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்.

நகல் : கீழ்கவரப்பட்டு இருப்பு கோப்பிற்கு.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate